பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 09 | திங்கட்கிழமை | 21.04.2025 | அதிர்வு 260

## கொலைக்குத் திட்டமிட்டிருந்த 9 பேர் ஆயுதங்களுடன் கைது!



நாடளாவிய ரீதியில்

06

# ஜனாதிபதி - தேர்தல் ஆணையத்துக்கு சுமந்திரன் நேற்றுப் பகிரங்கச் சவால்!

## அநுரவின் கருத்தை நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லத் தயாரா எனக் கேள்வி




தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரமே கண்ணை மூடிக்கொண்டு நிதியை ஒதுக்குவோம் என்றும், ஏனைய தரப்புக்களின் கீழ் வரும் சபைகளுக்கு நிதி ஒதுக்குவதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஜனாதிபதிக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் இரண்டு பகிரங்க சவால்களை விடுத்திருக்கின்றார்.

நேற்று அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது சுமந்திரன் இந்தச் சவாலை விடுத்தார்.

06

# ஈஸ்டர் தினத் தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் ஆறு வருடங்கள் நிறைவு

## நினைவுகூரும் வகையில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு



2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினமன்று நாடு முழுவதும் உள்ள 3 தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள பிரதான விருந்தகங்கள் என்பவற்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, இன்று காலை 7 மணிக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் இருந்து பிரார்த்தனை ஊர்வலம் தொடங்கி, கொச்சிக்கடை புனித

06




ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதல் விவகாரம் மீண்டும் சூடு பிடித்திருக்கும் சமயத்தில் இலங்கையின் கிறிஸ்தவ திருச்சபைக்கு மேலும் உத்வேகம் கொடுக்கும் விதத்தில் ஓர் அறிவிப்பை வத்திக்கானிலிருந்து திருச்சபை தலைமை வெளியிடவிருந்தது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இடம் பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்த அனைவரையும் 'விசுவாச மாவீரர்கள்' (Heroes of Faith)என்று பிரகடனப்படுத்துகின்றது கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் தலைமையகமான வத்திக்கான். நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த அறிவிப்பை வத்திக்கான் வெளியிடவிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களை 'விசுவாச மாவீரர்கள்' என்று பிரகடனப்படுத்தும் இந்த அறிவிப்பு அவர்களின் மரணத்திற்குக் காரணமானவர்களைப் பொறுப்பு கூற வைக்கச் செய்யும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவும் கூட

06



# கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் இன்று விசேட போக்குவரத்து திட்டம்

கொழும்பு – கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று நடைபெறவுள்ள விசேட வழிபாடு மற்றும் ஊர்வலம் காரணமாக அந்தப் பகுதியில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கடலோர காவல்துறை பிரிவுக்குட்பட்ட பல வீதிகள் இன்று காலை 7 மணி முதல் 11:45 வரை இடைக்கிடையே மூடப்படுமென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, முகத்துவாரத்தில் இருந்து புறக்கோட்டை வரையான வீதியும், கிறிஸ்டி பெரேரா சுற்றுவட்டத்தில் இருந்து கொச்சிக்கடை தேவாலயம் வரையிலான வீதியும் மூடப்படவுள்ளன.

# இராணுவத்துக்குக் கருணா, பிள்ளையான் உளவுத் தகவல்களை வழங்கவில்லையாம்

## இப்படிச் சொல்கின்றார் பொன்சேகா



“பிரபாகரனின் இருப்பிடம் தொடர்பான தகவல்களை கருணா அம்மான் எமக்கு வழங்கவில்லை. அதேபோல் கருணா, பிள்ளையான் ஆகியோர் உளவுத் தகவல்களையும் வழங்கவில்லை.” – என்று இறுதிக்கப்பட்டப்போரின்போது இராணுவத் தளபதியாகச் செயற்பட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றின்போது, போரை முடிப்பதற்கு கருணா, பிள்ளையான் ஆகியோர் வழங்கிய தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பொன்சேகா மேலும் கூறியவை வருமாறு:-

“கருணா அம்மானிடம் 150 பேர் இருந்தனர். அவர்களில் 80 பேர் சிறுவர் போராளிகள். எஞ்சியோரில் சிலர் கொழும்பில் இருந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினோம். புலிகள் அமைப்பில் இருந்து, வடக்கில் படையினருக்கு எதிராகச் சண்டை இட்டிருந்தாலும், பிரபாகரன் எங்கிருந்தார் என்ற தகவலைக்கூட கருணா எமக்கு வழங்கவில்லை.

அதேபோல் நான் போர் செய்த வியூகத்துக்கு அமைய எனக்கு உளவுத் தகவல்கள் தேவைப்படவும் இல்லை. ஏனெனில் நாம் தலையைத் தூக்கும்போது எமக்கு அருகில் பயங்கரவாதிகள் இருந்தனர். எனவே, உளவுத் தகவல்கள் அப்போது தேவைப்பட்டிருக்கவில்லை. எதிரிகள் எங்கு இருக்கின்றார்கள் என கருணாவிடம் கேட்க வேண்டிய தேவையும் இருக்கவில்லை.

வாழைச்சேனைக்கு மேல் கஜ/வத்தை என்ற ஒரு இடம் உள்ளது. அந்த இடத்தில் மாத்திரமே கருணாவின் படை பயன்படுத்தப்பட்டது. அதுவும் பிரதேசம் தொடர்பில் அனுபவம் இருக்கும் என்பதால் அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். அதுவும் தாக்குதலை முழுமைப்படுத்தாமல் காட்டுக்குள் தப்பி வந்து விட்டனர்.

எப்போதும் கருணா, பிள்ளையான் எமக்கு உளவுத் தகவல்களை வழங்கவில்லை. புலிகள் அமைப்பைத் தமிழர்களின் இராணுவம் என்றே தமிழர்கள் சிலர் கருதினர். புலிகள் தாக்குதல் நடத்தும்போது டயஸ்போராக்கள் சிலர் கொண்டாட்டங்களில் ஈடுபடுவார்கள். புலிகள் அமைப்புடன் மோதினாலும், புலிகள் தமிழர்களின் இராணுவம் என்ற உணர்வு கருணா, பிள்ளையானிடமும் இருந்தது.

இராணுவ முகாம்களுக்குள் கருணாவின் ஆட்களை நாம் வைத்திருக்கவில்லை என்பதைப் பொறுப்புடன் கூறுகின்றேன்.” – என்றார்.



# இலங்கைக்கே உரித்தான புதிய நுளம்பு அடையாளம்

இலங்கைக்கே உரித்தான புதிய நுளம்பு இனமொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மீரிகம பகுதியில் குறித்த புதிய நுளம்பு இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நுளம்பு இனம் கியூலெக்ஸ் லொபசெரோமியா சின்டெக்லஸ் (Culex (Lephoceraomyia) cinctellus) என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த நுளம்பு இனம் ஒரு முக்கிய வைரஸ் கடத்தியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் கயான் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

# டெங்கு - சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம்

தற்போதைய மழையுடனான வானிலை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முதுகுட தெரிவித்துள்ளார்.

நீண்ட விடுமுறை மற்றும் பாடசாலை விடுமுறை காரணமாக, பலர் சுற்றுலா சென்றுள்ளமையினால், தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறத்தையும் அவர்களால் சுத்தம் செய்ய முடியாது போயுள்ளது.

இதன் காரணமாக, நுளம்பு பெருகும் இடங்கள் சுத்தம் செய்யப்படாமையினால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் ஒரே வகையான நுளம்பால் பரப்பப்படுகின்றன.



இதன் காரணமாக, சுற்றுப்புறத்தைத் தொடர்ந்து சுத்தம் செய்வதன் மூலம் நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுப்பதற்குப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முதுகுட தெரிவித்துள்ளார்.



# உடுத்துறையில் வாள்வெட்டு! குடும்பஸ்தர் ஒருவர் காயம்!!

யாழ். வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடுத்துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் வீட்டுக்கு ஆழியவளை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சென்று கலந்துரையாடியபோது அது வாக்குவாதமாக மாறி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த ஆழியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் மருதங்கேணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகப் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் மதுபோதையில் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# அரச நிறுவன அதிகாரிகளின் தரவுகளை கோருகின்றது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக ஒவ்வொரு நிறுவனத்தின் அதிகாரிகளின் தரவுகள் உள்ளிட்ட ஏனைய விவரங்களைத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னதாக, அதிகாரிகளின் தரவுகள் மற்றும் வாகன விபரங்கள் உள்ளிட்ட தகவல்களை தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்குமாறு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் சில நிறுவனங்களிடமிருந்து இந்த தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இணுவிலில் சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் நால்வர் கைது!

யாழ்ப்பாணத்தில் சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் பெண் வேடமணிந்த ஆண் உள்ளிட்ட இரண்டு ஆண்களும் 2 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இணுவில் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது, பக்தர்களின் சுமார் 4 பவுண் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

சங்கிலி அறுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆலயச் சூழலில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நால்வரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கறுவா ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை அடிப்படையாக கொண்டு பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா உற்பத்திகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனா, ஐரோப்பிய ஒன்றியம், மத்திய கிழக்கு உள்ளிட்ட பல நாடுகள் அதிகளவில் கறுவாவை கொள்வனவு செய்து வருவதாக ஏற்றுமதி அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது.

பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா ஏற்றுமதியை அதிகரிப்பதன் ஊடாக நாட்டிற்கு அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# ரயிலில் மோதி இருவர் மரணம்

இருவேறு இடங்களில் ரயில்கள் மோதி இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பட்டிப்பொல பொலிஸ் பிரிவில், பெரகும்புர – அம்பேவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் கடவையில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தியதலாவை பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, உயிலங்குளம் பொலிஸ் பிரிவின் சிறுநாவற்குளம் பகுதியில், தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் மன்னார் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி இரண்டு சம்பவங்கள் தொடர்பாக பட்டிப்பொல மற்றும் உயிலங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விசேட பஸ் சேவைகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்கு சென்றவர்கள் மீண்டும் தலைநகர் உள்ளிட்ட இடங்களுக்குத் திரும்புவதற்காக விசேட பஸ் சேவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 24 மணிநேர சேவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கண்டி – தலதா மாளிகை புனித தந்தத்தாது கண்காட்சியைப் பார்வையிடுவதற்காகப் பயணிப்பவர்களுக்கு விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, கண்டி – கொழும்பு வீதியூடாக சுமார் 150 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# அனைத்து வாக்குச் சீட்டுகளையும் 30ஆம் திகதிக்குள் அச்சிட எதிர்பார்ப்பு

## அரச அச்சக மா அதிபர் தகவல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து வாக்குச் சீட்டுகளையும் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் அச்சிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அரச அச்சக மா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன், நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய 102 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் வாக்குச் சீட்டுகளை மீண்டும் அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அனைத்துத் தபால் வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்டு, விரைவில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரச அச்சக மா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோக்கப்படக்கூடியதுதான்.

\+ + +

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக அமெரிக்காவிலேயே பெரும் எதிர்ப்புகள் வெடிக்கும் ஏது நிலைகள் தென்படுகின்றன. மக்கள் கிளர்ச்சி சூடு பிடிக்கத் தொடங்கி இருக்கின்றது. ட்ரம்பை ஹிட்லருடனும் பாஸிஸ்ட் தலைவர்களுடனும் ஒப்பிடும் வகையிலான கோஷங்கள் போராட்டங்களில் முன்வைக்கப்படுகின்றன. போராட்டங்களில் மக்கள் பெருமளவு திரள்வது டிரம்ப் நிர்வாகத்திற்குச் சரியான எச்சரிக்கையாக அமையும் என்று அவதானிகள் கருதுகின்றனர். மக்கள் எதிர்ப்பையும் சர்வதேச விவகாரங்களைக் கையாளும் அதே முரட்டுத்தனத்துடன் அதிபர் ட்ரம்ப் எதிர்கொள்வாராயின் அவருக்கு நெருக்கடிகள் அதிகமாக காத்திருக்கின்றன என்பதுதான் அர்த்தம்.

\+ + +

உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரங்களில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு கட்சியை ஒட்டிய வழக்குச் சிக்கல்களும் நெருக்கடியாகத்தான் விளங்குகின்றன.

மயிலந்தனை, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினையையொட்டி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற எழுச்சிப் போராட்டங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்று ஏறாவூர் நீதிவான் நீதிமன்றுக்கு வருகின்றன. யோகேஸ்வரன், ஸ்ரீநேசன், அரியநேத்திரன் போன்ற டசினுக்கும் மேற்பட்டோருக்கு எதிரான இந்த வழக்குகளில் இன்று சுமந்திரன் முன்னிலையாகி வாதாடுகிறார். அதே சமயம் முன்னர் ராஜாங்க அமைச்சராக இருந்த வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு இன்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றுக்கு வருகின்றது. அந்த வழக்கில் உயிரிழந்த இளைஞனின் பெற்றோர்கள் சார்பில் அவர்களின் நலனுக்காக இன்று முன்னிலையாகி வாதாடுகின்றார் சுமந்திரன்.

இதேசமயம் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பான வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் ஜுன் 4-ஆம் திகதி வர இருக்கின்றது. ஆனால் அதற்கு முன்னர் அந்த வழக்கையொட்டி 'புதிய சுதந்திரன்' இதழில் அகிலன் முத்துக்குமாரசுவாமி எழுதிய செய்தி வடிவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரும் வெள்ளிக்கிழமை 25ஆம் திகதி திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படுகின்றது.

இந்த விசாரணையில் மேற்படி இலத்திரனியல் நாளிதழில் வெளியான சம்பந்தப்பட்ட செய்திக் கட்டுரை அகிலன் முத்துக்குமாரசுவாமியினால் எழுதப்பட்டது என்பது பற்றிய கேள்வி – பதிலை மாத்திரமே சாட்சியமாக தாம் முன்வைக்க விரும்புகிறார் என்று வழக்கின் ஒரு தரப்பு வாதியான சுமந்திரன் ஏற்கனவே மன்றில் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் எதிர்த் தரப்பு – அதாவது அகிலன் முத்துக்குமாரசுவாமியின் தரப்பு – தமது சாட்சியங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டதனால் 25 ஆம் திகதி அந்த விடயத்துக்காக வழக்கு எடுக்கப்படுகின்றது. அன்றைய தினம் அகிலன் முத்துக்குமாரசாமி தரப்பு ஏதேனும் சாட்சியங்களை முன்னெடுத்தால் அது நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வேறு சாட்சியங்கள் இல்லாவிட்டால் அது பற்றிய விடயம் விசாரித்து முடிவுறுத்தப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

## கொலைக்குத் திட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்பட்டு வரும் குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கொலை செய்யத் திட்டமிட்டு இருந்த 9 பேர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா – வத்துமுல்ல பகுதியில் வீடொன்றில் தங்கியிருந்து கொலை செய்யத் திட்டமிட்டு இருந்த ஆறு சந்தேக நபர்களும், சந்தேகத்தின் பேரில் இரண்டு சந்தேகநபர்களும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பில் இருந்த மற்றுமொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

இந்தக் கைது நடவடிக்கை நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் காலி, அனுக்கனே, உடுகம்பால, கம்பஹா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 22, 24, 25 மற்றும் 26 வயதுடையவர்களாவர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு ரி-56 துப்பாக்கிகள், ரி-56 துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 118 தோட்டாக்கள், மூன்று ரி-56 மகசீன்கள், ஒரு வான், ஒரு கார் மற்றும் ஒரு ஓட்டோ என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், மற்றுமொரு குற்றச் செயலில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் உடுகம்பலை பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 57 வயதுடையவர்களாவர்.

மேலும், மேற்படி இரண்டு சந்தேக நபர்களையும் குற்றக் கும்பலுடன் தொடர்புபடுத்திய மற்றுமொரு சந்தேகநபரைக் குருநாகல் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் 4 கையடக்கத் தொலைபேசிகளுடன் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்ஹெட்டிபொல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளில் இவர்கள் இருவரும் தற்போது வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவரின் சகாக்கள் எனத் தெரியவந்துள்ளது.

## ஈஸ்டர் தினத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தோனியார் தேவாலயத்தை சென்றடையும்.

காலை 8.30 மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தலைமையில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

காலை 8.45 மணிக்கு, அனைத்து மத ஸ்தலங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கமேற்படிகருத்தின்மூலம்தேர்தல்சட்டங்களை முழுமையாக மீறி இருக்கின்றார் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரத்தென்பிருக்குமா என்று தேர்தல் ஆணையத்துக்குச் சவால் விடுத்த சுமந்திரன், அப்படி வழக்குத் தொடரப்படும் போது தமக்குரிய வழக்கு விடுபாட்டு உரிமையைப் பயன்படுத்தாமல் அந்த வழக்கை எதிர்கொள்ளும் திராணி ஜனாதிபதிக்கு இருக்கின்றதா என அவருக்கும் சவால் விடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதி தான் பகிரங்கமாகக் கூறிய இந்தக் கருத்துத் தொடர்பில் புதுவித விளக்கங்களை இப்போது தெரிவித்து வருகின்ற பின்னணியில் இந்த விடயத்தை நீதிமன்றத்தில் தீர்வு காணத் தயாராக என்ற சவாலை சுமந்திரன் பகிரங்கமாக விடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதே விடயத்தையொட்டி எட்டு இடங்களில் ஆற்றிய உரைகளைக் குறிப்பிட்டு, தேர்தல் ஆணையத்திடம் இரண்டு தடவைகள் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையத்தின் சார்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மார்ச் 29ஆம் திகதி திஸ்ஸமஹர கமவில், மார்ச் 31ஆம் திகதி புத்தளவில், ஏப்ரல் 10 ஆம் திகதி கண்டியில், ஏப்ரல் 11 ஆம் திகதி அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறையில், ஏப்ரல் 12ஆம் திகதி கந்தளாய் மற்றும் மட்டக்களப்பில், ஏப்ரல் 17 ஆம் திகதி மன்னாரில் ஜனாதிபதி ஆற்றிய உரைகள் குறித்து இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த எட்டுக் கூட்டங்களிலும் "தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றங்கள் தருகின்ற திட்டங்களுக்குக் கண்ணை மூடிக்கொண்டு நிதியை ஒதுக்குவோம்" என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை சட்டவிரோதமானது என்று மேற்படி தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலரான பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்த கருத்து உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கட்டளை (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவுகள் 82 "இ" (முறையற்ற செல்வாக்கு) மற்றும் 82 "ஈ" (லஞ்சம்) ஆகியவற்றின் கீழ் கடுமையான மற்றும் தெளிவான மீறல்களாகக் கருதப்படுகின்றன என அவர் கூறியிருக்கின்றார்.

**சுமந்திரனின் சவால்**

இது தொடர்பில் சுமந்திரன் நேற்று திருக்கோவிலில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விவரங்கள் வருமாறு:-

"உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 82 "இ" மற்றும் 82 "ஈ" ஆகிய இரண்டு பிரிவுகளையும் ஜனாதிபதி மீறி இருக்கின்றார். அப்படி ஜனாதிபதி மீறி இருக்கின்றார் என்று தேர்தல் கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் தேர்தல் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார். அந்த முறைப்பாட்டுக்கு தேர்தல் ஆணைக்குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்கள் அரசமைப்பிலே 35 ஆவது உறுப்புரையிலே ஒரு பிரிவு இருக்கின்றது. அது ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுக்க

07

## ஜனாதிபதி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாது என்பதற்கான விடுபாட்டு உரிமை. அதாவது பலரும் நினைப்பது அதன்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது என்றுதான். ஆனால், அப்படி அல்ல. அதாவது அது விடுபாட்டு உரிமைதான். அப்படி யாராவது வழக்குத் தொடுத்தால், அவர் (ஜனாதிபதி) நீதிமன்றுக்குச் சென்று அந்த வழக்கிலிருந்து விடுபடுவதற்கான உரிமை தனக்கு உண்டு என்று நீதிமன்றத்திடம் சொல்வதற்கான ஒரு ஏற்பாடு. அது அரசமைப்பின் 35 ஆவது உறுப்புரையிலே உள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு நான் ஒரு சவால் விடுகின்றேன். ஜனாதிபதி நேரடியாகவே தேர்தல் சட்டத்தை மீறியிருக்கின்றார். ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுக்கின்ற தெம்பு உங்களுக்கு இருக்கின்றதா? நீங்கள் உண்மையாகவே சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவாக இருந்தால், அவருக்கு எதிராக வழக்குத் தொடருங்கள். அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை. அப்படித் தேர்தல் ஆணையம் வழக்குத் தொடுக்கின்றபோது, ஜனாதிபதிக்கு இரண்டாவது சவாலை நான் முன்வைக்கின்றேன். விடுபாட்டுரிமையை விலக்கி, அந்த வழக்கை அந்த எதிர்கொள்ளும்படி நான் ஜனாதிபதிக்குச் சவால் விடுகின்றேன்.

இப்போது மாறி மாறி ஜனாதிபதி மறுப்பு அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றார். நாங்கள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டிய பின்னர் "இல்லை, இல்லை நான் அப்படிச் சொல்லவில்லை. நான் இப்படிச் சொன்னேன். நான் இதைத்தான் சொன்னேன். மற்றக் கட்சிகள் நிர்வகிக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி கொடுக்க மாட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆராய்ந்து பார்த்துத்தான் கொடுப்போம் என்றே சொன்னேன்." என்றெல்லாம் கூறுகின்றார். அது அப்படியே இருக்கட்டும். தேசிய மக்கள் சக்தி நிர்வகிக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து வருகின்ற கோரிக்கைகளுக்கு நாங்கள் கண்ணை மூடிக் கொண்டு நிதியைக் கொடுப்போம் என்று ஜனாதிபதி சொல்லி இருக்கின்றார். யாராவது கண்ணை மூடிக்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா? அதற்கு நிதி விதிமுறைகள் இல்லையா? இப்படியாக அப்பட்டமான ஒரு பொய்யையும் சொல்லி, மக்களை தன்னுடைய கட்சிக்கு வாக்களிக்கத் தூண்டி இருக்கின்றார். தன்னுடைய கட்சிக்கு மக்களை வாக்களிக்க செய்வதற்காக இப்படியான பொய்களைச் சொல்லி, பசாப்பு வார்த்தைகளை சொல்லி, முறையற்ற அழுத்தங்களை பிரயோக்கின்றார். அதைத்தான் 582 "ஈ" பிரிவு கூறுகின்றது. ஜனாதிபதி இலஞ்சம் கொடுத்து தன்னுடைய கட்சிக்கு வாக்களிக்கச் செய்வதற்காக மெத்தப் பிரயத்தனம் செய்கின்றார்.

அப்படியான ஊழலற்ற ஆட்சி என்று கூறி, மாற்றம் என்று கூறி, பதவிக்கு வந்தவர்கள் இன்று செய்கின்ற செயல்கள்தான் இவை. நீதியான – நேர்மையான – தேர்தல்களை நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையத்துக்கு மட்டுமல்ல, ஜனாதிபதிக்கும் அரசமைப்பின் கீழ் உண்டு. அதையும் மீறி, தேர்தல் சட்டங்களையும் மீறி, தேர்தல் சட்டங்களை மீறுகின்ற குற்றங்களை புரிகின்றவராக, மிகவும் கீழானவராக ஜனாதிபதி இறங்கி வந்திருக்கின்றார்.

இந்தத் தேர்தலிலே தங்களுக்கு இன்னும் செல்வாக்கு இருக்கின்றது என்று காட்டுவதற்காக இந்த நிலைக்கு இறங்கி உள்ளார். இப்போது இவர்களுடைய நிறம் வெளுத்து விட்டது. சிவப்பு என்று சொன்னார்கள். வெளுத்து விட்டது. ஊழலற்ற ஆட்சி என்று சொன்னார்கள். வெளுத்து விட்டது. இவர்களுக்கும் உலகத்துக்கும் நீங்கள் கொடுக்க வேண்டிய செய்தியை மிகத் தெட்டத் தெளிவாக இந்தத் தேர்தலிலே நீங்கள் கொடுத்தே ஆக வேண்டும்." – என்று கூறினார் சுமந்திரன்.

## கொக்கெய்னுடன் தொகையுடன் வெளிநாட்டு பிரஜை ஒருவர் கைது



கொக்கெய்ன் போதைப்பொருள் தொகையுடன் வெளிநாட்டு பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காட்போட் அட்டையில் ஒட்டப்பட்ட சிறிய கொக்கெய்ன் பொதிகளை தமது பயணப்பைக்குள் மறைத்து வைத்து அவர் நாட்டிற்கு கொண்டு வந்துள்ளார் என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி பொதிகளில் அடங்கியுள்ள கொக்கெய்ன் அளவை கணக்கிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுரவின் பொறுப்பு

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய துயரமே 2019 இல் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விவரித்து இருக்கின்றார்.

நேற்று பொலனறுவையில் நடந்த தேர்தல் பேரணியில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த ஐந்தரை ஆண்டு காலமாக - ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டு தாக்குதல் இடம் பெற்ற காலம் முதல் - தம்முடைய ஆட்சி ஏற்படும் வரை, இத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் பின்னணியில் உண்மையான சூத்திரதாரிகளை மறைக்கும் நோக்கம் இருந்ததாக ஜனாதிபதி பொலனறுவையில் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

2019 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் அதைத் தொடர்ந்து வந்த அரசாங்கமும் உண்மையான குற்றவாளிகளை நீதியின் முன்னநிறுத்தும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

தாம் பதவியேற்ற ஆறு மாதங்களுக்குள் ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் மற்றும் நீதியை உறுதி செய்வதற்குப் படிப்படியாகத் ஸ்திரமான நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறார் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

அவரது இந்தக் கருத்துகள், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலை அடுத்து அதனை அரசியல் ரீதியாக பயன்படுத்தி அதிகாரத்துக்கு வந்தவர்கள் மீது குற்றச்சாட்டு விரலை நீட்டுகின்றன என்பது தெளிவு.

இக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் இதே போன்ற விடயத்தை சுட்டிக்காட்டி இருந்தது. இந்தக் குண்டு தாக்குதலின் மூலம் அரசியல் ரீதியாக லாபமடைந்த தரப்புகள் இதன் பின்னணியில் இருக்கலாம் என்பதை நுணுக்கமாக ஆராய்ந்து புலனாய்வு செய்ய வேண்டும் என்று அந்த நாடாளுமன்ற தெரிவுக்குழு அப்போதே தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

இப்போது இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைகுழுவின் அறிக்கையை இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்தும் குற்றப் புலனாய்வார்களிடம் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றார். அதேபோல இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையும் குற்றப்புலனாய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்தத் தாக்குதலினால் அரசியல் லாபம் அடைந்தவர்களின் பின்னணி குறித்துத் துருவித் துருவி விசாரிக்க வேண்டும் என்பது வெளிப்படையான விவகாரம். குண்டுத் தாக்குதலின் பின்னர் அவர்கள் தரப்பிடம் அதிகாரம் மாறியமையினால், இந்தத் தாக்குதலின் பின்னணி, சூத்திரதாரிகள் மற்றும் விடயங்கள் பற்றிய விசாரணைகள் முடக்கப்பட்டதான சந்தேகம் பலதரப்பிலும் உண்டு. அதனை மெய்ப்பிப்பது போல ஜனாதிபதி இப்போது கருத்து வெளியிட்டு வருகிறார்.

இந்தக் கருத்துக்கள், இப்போது வாக்காளர்களைக் கவரவும், இந்தக் குண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்புக்களின் பிரதிநிதிகளான கிறிஸ்தவ திருச்சபையை சமாளிக்கவும் வெளிப்படுத்தப்படுவனவாக இல்லாமல், உண்மையாகவே இந்தக் கொடூரத்தின் சூத்திரதாரிகளை விரைந்து அம்பலப்படுத்தி, சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தச் செய்வனவாக செயலுருப் பெறவேண்டும். அது புதிய ஆட்சியாளர்களின் பொறுப்பும் கடப்பாடும் ஆகும்.

# தி.மு.க. கூட்டணிக்குள் பிளவு ஏற்படுத்துவதற்கு வி.சி.கவை துருப்புச் சீட்டாக்கப் பார்க்கிறார்கள்

## திருமாவளவன் தெரிவிப்பு



இன்னும் சில மாதங்களில் கூட்டணி தொடர்பான விவாதங்கள் தீவிரமடையும். அப்போது தி.மு.க கூட்டணியில் பிளவினை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. அதற்கு வி.சி.கவைத் துருப்புச் சீட்டாக ஆக்க பார்க்கிறார்கள் என்று அக்கட்சி தலைவர் திருமாவளவன் தொண்டர்களை எச்சரித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும் சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திருமாவளவன் முகநூல் நேரலையில் வெளியிட்ட காணொலியில் மேலும் குறிப்பிடுகையில்,

“எல்லோரும் தேர்தலுக்காக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைவிட முக்கியமான விஷயம் பா.ஜ.க. பாசிச அரசு மெல்ல மெல்ல சாதுரியமாக காய்களை நகர்த்தி புரட்சியாளர் அம்பேத்கரால் வகுத்தளிக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்கிற அனைத்து வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள் இதனை நாம் அமைதியாக வேடிக்கை பார்த்த முடியாது.

தமிழ்நாட்டு அரசியலில் தேவையற்ற விவாதத்தை உருவாக்குகிறார்கள். சாதிய, மதவாத சக்திகளை ஊக்குவிக்கிறார்கள், உதிரிகளை ஊக்குவிக்கிறார்கள். தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நாம் கருத்துகளை முன்வைத்தோமானால், நாம் திராவிட முன்னேற்ற கழகத்தை மட்டுமே நம்பிக்கிடக்கிறோம் என்பது போல் ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார்கள்.

விடுதலைச் சிறுத்தைகளுக்கு எதிரான கருத்துக்களை உதிரிகளைக் கொண்டு முன்வைக்கிறார்கள். அந்த அற்பர்களின் அவதூறுகளை நாம் கடந்து செல்கிறோம் என்றாலும் கூட இயக்கத் தோழர்கள் அதில் ஒருத்தெளிவைப் பெற வேண்டும். தேர்தல் அரசியலில் எந்தமுடிவையும் நம்மால் எடுக்க முடியும். அது ஒன்றும் பெரிய கம்ப சூத்திரம் இல்லை. எல்லா கதவுகளையும் திறந்து வைத்திருப்பது, ஒரே நேரத்தில் பலரோடு பேரம் பேசுவது, கூட்டணிக்காக கதவை திறந்து வைப்பது என்பது ஒன்றும் இராஜதந்திரம் இல்லை. அது சந்தர்ப்பவாத அரசியல்.

இதையெல்லாம் புரிந்து கொள்ள முடியாதவர்கள் அவதூறு பரப்புகிறார்கள் அதை நாம் பொருட்படுத்தவில்லை. ஈடுபாடு காட்டவில்லை. எதிர்பார்ப்பு நிபந்தனை இல்லாமல் கூட்டணியில் இருக்க துணிச்சல், தொலைநோக்கு பார்வை வேண்டும். அதெல்லாம் வாய்க்கப்பெறாதவர்கள் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று அவதூறு பரப்புகிறார்கள்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி பிற அரசியல் கட்சிகள் போல் இல்லாமல் முன்மாதிரியாக இயங்கி வருவதை காலம் சுட்டிக்காட்டி வருகிறது. தொடர்ந்து அதனை உண்மையாக்குவோம். அனைவரும் சொல்வதற்கு எதிர்வினையாற்றுகிறோம் என்று ஏதேனும் கருத்துக்களைச் சொல்லி அந்த சதிக்குள் தொண்டர்கள் சிக்கிக் கொள்ளக்கூடாது.

அரசியல் தொடர்பான விவாதங்களில் தலைமையின் கருத்து மற்றும் போக்கினை அறிந்து தொண்டர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும். தேர்தலுக்கு இன்னும் ஒருவருடம் கூட இல்லை. இன்னும் சில மாதங்களில் கூட்டணி தொடர்பான விவாதங்கள் தீவிரமடையும். அப்போது தி.மு.க. கூட்டணியில் பிளவினை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. அதற்கு வி.சி.கவைத் துருப்புச் சீட்டாக ஆக்க பார்க்கிறார்கள்.” என்றார்.

# தி.மு.க. கூட்டணி நாளுக்கு நாள் வலிமை பெறுகிறது: மு.க.ஸ்டாலின்



தி.மு.க. கூட்டணி கட்சிகளுக்குள்ளான உறவு உறுதியாக உள்ளது என்றும் கூட்டணி நாளுக்கு நாள் வலிமை பெறுகிறது எனவும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் பேபியுடனான சந்திப்புக்குப் பின்னர் அவர் இதனை எக்ஸ் தளத்தில் பதிவாகப் பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில், “மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தேசிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் எம்.ஏ. பேபி இன்று என்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து, ஆளுநர்களின் அதிகார எல்லையை வெட்டவெளிச்சமாக்கிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, நாம் அமைத்துள்ள மாநில சுயாட்சிக்கான உயர்நிலைக் குழு ஆகிய இரண்டு முக்கியமான முன்னேற்றங்களுக்காகத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இவை தனித்த வெற்றிகள் அல்ல. அண்மையில் மதுரையில் நடந்தேறிய ஊஜ்ஆ கட்சியின் 24 ஆவது அகில இந்திய மாநாட்டில், அரசமைப்புச் சட்டமே முதன்மை என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை நியமனப் பதவிகளில் இருப்போர் தடுக்க முடியாது எனவும் நாம் முழங்கி முன்னெடுத்த கூட்டாட்சிக் கருத்தியல்களின் வெளிப்பாடு ஆகும். எங்கள் உறவு உறுதியாக உள்ளது. கூட்டணி நாளுக்கு நாள் வலிமை பெறுகிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஷேக் ஹசீனாவுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை பிறப்பிக்க சர்வதேச பொலிஸாரிடம் கோரிக்கை



பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கையை பிறப்பிக்குமாறு பங்களாதேஷ் சர்வதேச பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷ் பொலிஸின் தேசிய மத்திய பணியகத்தினால் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அரசாங்கத்திற்கு எதிராக பங்களாதேஷில் பொதுமக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து பிரதமர் ஷேக் ஹசீனா பதவி நீக்கப்பட்டதுடன் அவர் இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

அவரை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வந்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பங்களாதேஷ் பொலிஸாரினால் சர்வதேச பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் சிறிய ரக விமானம் வெடித்துச் சிதறியதால் 4 பேர் பலி



அமெரிக்காவில் பறந்து கொண்டிருந்த சிறிய ரக விமானம் வெடித்து சிதறி விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் இல்லினாய்ஸில் சிறிய ரக ஒற்றை என்ஜின் விமானமான செஸ்னா சி180ஜி விமானம், மின்கம்பிகள் மீது மோதியதில் வெடித்து சிதறியதாகக் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், விமானத்தில் பயணித்த இரு பெண்களும், இரு ஆண்களும் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய பெடரல் ஏவியேஷன் நிர்வாகம் மற்றும் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு திணைக்களம் விசாரணையைத் தொடங்கியுள்ளன.

# தலைகீழாக ஓடுகின்ற உலகின் முதலாவது கார்





பிரித்தானியாவைச் சேர்ந்த மெக்மர்ட்ரி ஸ்பீர்லிங் நிறுவனம், தலைகீழாக ஓடும் காரை தயாரித்துள்ளது.

முன்னதாக, இந்த நிறுவனம் தயாரித்த ஹைபர் மின்சார கார், பல்வேறு சாதனைகளைத் தன்வசம் வைத்துள்ள நிலையில், தற்போது உலகின் முதல் தலைகீழாக ஓடும் காரினை தயாரித்த பெருமையையும் பெற்றுள்ளது.

டவுன்ஃபோர்ஸ் ஆன் டிமாண்ட் விசிறி எனப்படும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் இந்த கார் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி விரைவில் 100 கார்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு இந்த கார் சந்தைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# திருகோணமலையில் இரத்ததானமும், தொற்றா நோய் விழிப்புணர்வும்

அகில இலங்கை சுதேச மருத்துவ எதிர்கால சேவை சங்கத்தின் தலைமையில் திருகோணமலையில் இரத்ததானமும், தொற்றா நோய் விழிப்புணர்வும் நேற்று இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் மூலம், சுதேச மருத்துவர்கள் தங்களுடைய சமூக பங்களிப்பை உறுதியாக வெளிப்படுத்தினர். ரத்ததானத்தில் பெரும்பான்மையினர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களுடைய ரத்தத்தை தானமாக வழங்கினர். இத்துடன், தொற்றா நோய்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் பயனுள்ள விழிப்புணர்வு அமர்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது, ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பில், சுதேச மருத்துவர்களுக்கு அரச நியமனம் வழங்கப்பட வேண்டிய அவசியம் குறித்து உரையாடப்பட்டது. நாட்டில் இறக்குமதியாகக் கொண்டு வரப்படும் வைத்திய முறைகளைவிட, சொந்தமான சுதேச மருத்துவ முறைகளை ஊக்குவிப்பதன் மூலம் நாடு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கான வாய்ப்பு உண்டு என சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிகழ்வு, சுதேச மருத்துவத்தின் சமூக பங்களிப்பையும், நாட்டின் சுகாதார எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் பார்வையையும் அழுத்தமாக வெளிப்படுத்தும் நிகழ்வாக அமைந்துள்ளது.













# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# முள்ளியவளை மேற்கில் தமிழரசுக் கட்சியின் பரப்புரையும், மக்கள் குறைகேள் சந்திப்பும்

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகாரசபை பிரிவில் அமைந்துள்ள, முள்ளியவளை மேற்கு வட்டாரத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் உள்ளூர் அதிகாரசபை தேர்தல் பரப்புரைக்கூட்டமும், மக்கள் குறைகேள் சந்திப்பும் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

இதன்போது அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிக்கு மக்கள் வாக்குச் செலுத்தவேண்டிய அவசியம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் மற்றும், வட்டாரவேட்பாளர்களான இ.ஜெகதீசன், மு.செல்வக்குமார் ஆகியோரால் மக்களிடம் தெளிவுபடுத்தப்பட்டது.

அதனையடுத்து நாவல்காடு, பொன்னகர் பகுதிகளில் உள்ள உள்ளக வீதிகளின் சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைகள், தேவைப்பாடுகள் தொடர்பில் அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொன்னகர் கிராமத்திலுள்ள முதலாம் ஒழுங்கை, இரண்டாம் ஒழுங்கை, மூன்றாம் ஒழுங்கை, நான்காம் ஒழுங்கை, ஐந்தாம் ஒழுங்கை ஆகிய வீதிகளைச் சீரமைப்புச் செய்ய தம்மால் நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதேபோல் நாவல்காடு வீதியைச் சீரமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ரவிகரன் இதன்போது மக்களிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடனத்தில் சாதித்த அப்பகுதி மாணவி ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினரால் இதன்போது மதிப்பளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஆளும் தரப்புக்கு இம்முறையும் ஆதரவளித்தால் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பு சட்டரீதியாகும்

### எச்சரிக்கின்றார் ரெலோப் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி




தமிழ் மக்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றத் துடிக்கும் தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள் செல்லுமாயின் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அனைத்து ஆக்கிரமிப்பு செயற்பாடு களும் சட்ட ரீதியாக மாற்றப்படும் சூழலை கண்கூடாக பார்க்க வேண்டிய துப்பாக்கிய நிலை ஏற்படும்.

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வடமாகாண அமைப்பாளரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பேச்சாளருமான சுரேன் குரு சுவாமி எச்சரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமை அலுவலத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் 9 உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிரா கரிக்கப்பட்ட நிலையில் அவற்றை ஏற்குமாறு மேன்முறையீட்டு நீதி மன்றம் தனது தீர்ப்பின் மூலம் உறு திப்படுத்தியுள்ளது.

எமது கூட்டமைப்பின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை திட்டமிட்ட ஒரு செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்ற நிலையில் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்று தீர்வைப் பெற்றுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் காக சங்கு சின்னத்தில் பரந்துபட்ட கூட்டணி ஒன்றை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அமைத்துள்ளது. ஜனாதிபதி தேர்தலில் சங்குச் சின் னத்துக்கு மக்கள் வழங்கிய ஆதரவை உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் வழங்குவார்கள் என எதிர்பார்க்கி றோம்.

தேசிய மக்கள் சக்தியினர் வடக்கு, கிழக்குத் தமிழ்ப் பேசும் மக்களிடம் தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்று தருகிறோம், அரசியல் கைதிகளை விடுவிக்கிறோம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குகிறோம், படைகளிடம் உள்ள மக்கள் காணிகளை விடு வித்துத் தருகிறோம் என வாக்குறுதி களை அள்ளி வழங்கி மூன்று ஆசனங் களை பெற்றார்கள்.

ஆனால் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கடக்கின்ற நிலையில் அரசியல் கைதிகள் விடுவிக்கப் படவுமில்லை, பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவுமில்லை, பொதுமக் களின் காணிகள் விடுவிக்கப்படவு மில்லை.

இந்த அரசாங்கத்தினுடைய ஏமாற் றும் செயற்பாடுகளை தமிழ் மக்கள் வெறுக்க ஆரம்பித்து உள்ளனர். அத னால் உள்ளூராட்சி மன்றங்களிலி ருந்தும் அவர்களை விரட்ட வேண்டும்.

ஏனெனில் தமிழர் பகுதிகளில் சட்ட விரோத விகாரரைகள் அமைக் கப்பட்டு வருகின்றன. எமது மக்களு டைய காணிகள் தொடர்ந்தும் இராணு வத்தினரால் கையகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் தடுப்பதற்கு உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள் எங்களிடம் இருக்க வேண்டும்.

மாறாக உள்ளூராட்சி மன்ற அதி காரங்கள் தேசிய மக்கள் சக்தி இடம் செல்லுமாயின் சட்டவிரோத தையிட்டி விகாரை அமைக்கப்பட்டது சரிதான் என்று பிரதேச சபையில் தீர்மா னம் நிறைவேற்றுகின்ற நிலைமை ஏற்படலாம்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ராஜீவன் ஜெயச்சந்– திர மூர்த்தி தமக்கும் தையிட்டி விகாை– ரக்கும் சம்பந்தமில்லை எனப் பிரசாரம் செய்து வருகிறார்.

ஆகையினால் தையிட்டி விகாரை சட்டவிரோத விகாரை எனப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அந்த விகாரைக்குள் தேசிய மக்கள் சக்தி யின் ஆட்சியில் கடந்த மாதம் புதிதாக தியான மண்டபம் பெரும் எடுப்பில் திறந்து வைக்கப்பட்டதற்கு பதில் கூற முடியுமா என அவரிடம் நான் கேட்க விரும்புகிறேன்

சிங்கள தேசியவாதத்தை தமிழர் பகுதிகளில் விதைப்பதற்காக விலை பேசப்பட்ட சிலர் தாமும் தமிழ் மக்க ளுக்காக குரல் கொடுக்கிறோம் என கூறிக் கொண்டு தமிழ் தேசியத்தை முற்றாக சிதைப்பதற்கான வேலைத் திட்டங்களில் தீவிரமாக இறங்கியுள்ள னர்.

அதன் ஓர் அங்கமாகவே உள்ளூர் ஆட்சி மன்ற அதிகாரங்களையும் கைப்பற்றி விட்டால் தமிழ் மக்கள் தமிழ் தேசியமாகப் பேரம் பேச முடியாத நிலைமை ஏற்படும். இதற்காக தமிழ் மக்களின் அடிமட்ட அரசியல் இலக் கான உள்ளூராட்சி மன்றங்களையும் அடிபணிய வைப்பதே அவர்களின் நோக்கம்.

எனவே இந்த விடயங்களைத் தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண் டும். சிங்கள தேசியவாதம் எவ்வாறு தமிழ் மக்களை மலினப்படுத்த முடியுமோ அந்த அளவு தூரத்துக்கு நுட்பமாக இறங்கி தமிழ் மக்களின் வாக்குகளை கைப்பற்றிக் கொள்வ தற்கான பாரிய முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றது.

ஆகவே தமிழ் மக்கள் கடந்த தேர் தலில் சங்குச் சின்னத்துக்கு வழங்கிய பேராதரவை இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் வழங்கி தமிழ் மக்க ளின் இலக்குகளை அடைய முன்வர வேண்டும். – என அவர் மேலும் தெரி வித்தார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# தமிழ்த் தேசத்தின் இருப்பை உறுதி செய்யும் தேர்தல் இது!

### விளக்குகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னரும் தமிழ்த் தேசம் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடுதான் இருக்கின்றது என்பதைக் காட்ட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எனவே தமிழ்த் தேசத்தின் இருப்பு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கப் போகின்ற வித்திலேயே உள்ளது என்ற உண்மையை மக்கள் மத்தியில் வெளிப்படுத்த வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17ஆவது நினைவு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசத்தை அழிப்பதற்காக இனவழிப்பை மேற்கொண்ட மஹிந்தவிற்கு உறுதுணையாக நின்றவர்கள் ஜே.வி.பியினர். சுனாமியின் தாக்கத்தினால் வடகிழக்கில் பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்தன. அவற்றில் 80 சதவீதமான சேதங்கள் விடுதலைப் புலிகளின் நேரடியான கட்டுப்பாட்டில் இருந்த இடங்களிலே ஏற்பட்டன.

சுனாமி தாக்கத்திற்கு உள்ளான பிரதேசங்களை மீள கட்டியமைக்கும் வகையில் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று சர்வதேச நாடுகளின் அழுத்தத்தினால் மேற்கொள்ளப்பட இருந்தது. அதைக்கூட தமிழ் மக்களுக்கு கிடைக்க விடக்கூடாது என ஜே.வி.பி.சட்ட ரீதியாக எதிர்த்தது. நீதிமன்றம் சென்று தமிழர்களின் தீர்வுக்கான அடிப்படை கோட்பாடாக இருந்த இணைந்த வடகிழக்கு தமிழர் தாயக கோட்பாடுகளுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ஜே.வி.பி. செயற்பட்டது.

இன்று அதே ஜே.வி.பியினர் தமிழர்கள் தமக்கு ஆணை வழங்கியிருக்கின்றனர் என உலக நாடுகளிடம் சொல்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ்க் கட்சிகள் நேர்மையாக பயணித்திருந்தால் அந்த நிலைமை உருவாகியிருக்காது. தமிழ்த் தேசிய அரசியலில் இருந்தவர்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை சிதறடித்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் ஒரு தவறான பாதையில் செல்கின்றது என்ற உண்மையை மூடி மறைத்து, வெறுமனே தேசியத் தலைவரால் உருவாக்கிய கூட்டமைப்பை நாங்கள் பிளவுபடுத்தினோம் என்ற விம்பமே அன்று உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த தரப்புகள் அனைவரும் படிப்படியாக வெளியேறியிருக்கிறார்கள். அதனை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் இன்று ஒன்றுபடுவதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்றால் அது எந்த அடிப்படையில் நடைபெறுகின்றது என்பதை மக்கள் ஆராய வேண்டும். இந்த கேள்விகளை ஆராய்ந்து மக்கள் வாக்களிக்காதுவிட்டால் தமிழ்த் தேசத்தை காப்பாற்ற முடியாது.

புலிகள் இயக்கம் போல் தங்களுடைய உயிரைக் கொடுத்து தமிழ் மக்களை காப்பாற்றக்கூடியவர்கள் உருவாகப் போவதில்லை. தங்கள் உயிரை அர்ப்பணிக்கக்கூடியவர்கள் பொய்க்காக தங்கள் உயிரை அர்ப்பணிக்க போவதில்லை. மக்களுக்காக உயிர் கொடுத்தவர்களை நம்பலாம். ஆனால் அரசியல் என்று வருகின்ற போது எவரையும் நம்ப முடியாது. மக்கள் சிந்தித்துக் கேள்விகளை கேட்க வேண்டும். அப்போதுதான் ஏமாற்றுவதை தடுக்க முடியும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்ற தேர்தலாக அமையப் போகின்றது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜேவிபினருக்கு தமிழ் மக்கள் தங்களுடைய ஆணையை வழங்குவதன் ஊடாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருந்து மக்கள் விலகி விட்டார்கள் என்ற பார்வை சர்வதேச மட்டத்தில் விதை–தக்கப்பட்டது. எனினும் அது தவறானது என்ற எங்களுடைய பிரதி வாதங்களையும் தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றோம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னரும் தமிழ்த் தேசம் தொடர்ந்தும் தமிழ் தேசிய நிலைப்பாட்டோடு தான் இருக்கின்றது என்பதை காட்ட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக வருகின்ற தேர்தல் தமிழ்த் தேசிய கொள்கைகளோடு சம்பந்தப்படாத உள்ளாட்சி தேர்தலே நடக்கப்போகின்றது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டினை உள்ளூராட்சி தேர்தல் ஊடாக வெளிப்படுத்துவது என்பது மிகவும் கடினமானது. உள்ளூராட்சி தேர்தலில் மாற்றுக் கட்சிகளாக இருந்தாலும் ஊர்களில் நம்பிக்கையான வர்கள் போட்டியிட்டால் வெற்றி பெறக் கூடிய வாய்ப்பு உள்ளது.

எனினும் தமிழ்த் தேசத்தின் இருப்பு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கப் போகின்ற வித்திலே தான் உள்ளது என்ற உண்மையை மக்கள் மத்தியில் எமது வேட்பாளர்கள் கொண்டு செல்ல வேண்டும் , – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# சின்னவத்தை விகாரையைக் கட்டுவதற்கு அழைப்பு விடுத்தவர்கள் தமிழ்த் தேசிய உடையைப் போட்டுக் கொண்டு நாடகமாடுகின்றனர்

### ஏமாறவேண்டாம் என்கின்றார் தமிழ்த் தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர்



**(கனகராசா சரவணன்)**

கடந்த காலத்தில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது ராஜபக்ஷ குடும்பத்துடன் இணைந்து கிரிபத்து உண்டு, வெடி கொழுத்தி மகிழ்ந்த மையுடன் பிள்ளையான், கருணா குழுவுடன் இணைந்து மேடைகளில் ஏறி வாக்குகேட்டுப் பிரச்சாரம் செய்தனர். அவர்களே சின்னவத்தை விகாரையைக் கட்டுவதற்கு அழைப்பும் விடுத்தார்கள். அவர்கள் இப்போது தமிழ் தேசிய உடையைப் போட்டுக் கொண்டு, இன்று வெள்ளைவேட்டி சேட்டுன் மாலை போட்டு நாடகமாடி வருகின்றனர். இவர்களின் கதைக்கு ஒரு போதும் தமிழ் மக்கள் ஏமாறக் கூடாது எனத் தமிழ்த் தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஷ் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி வவுணதீவு பிரதேச சபை வேட்பாளர் செல்வகுமார் தலைமையில் ஆயித்தியமலை நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற தியாக தீபம் அன்னை பூபதியின் 37 ஆவது நினைவேந்தலில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தின் போது இலங்கை இராணுவத்தின் பலத்தின் ஒரு சம பலத்தை விடுதலைப் புலிகள் கொண்டிருந்தனர். அதனடிப்படையில் அரசாங்கம் பேச்சுவார்தைக்கு அழைத்தது. நோர்வே போன்ற நாடுகள் எங்களை மழுங்கடிக்கச் செய்து பெரிய இனழிப்புக்கு உட்படுத்தியுள்ளன.

ஆகவே இதற்கான பரிகாரங்களை சர்வதேசத்தில் இருக்கின்ற சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணை மூலம் பெற வேண்டும். அதற்கான நகர்த்தல்களை செய்ய வேண்டுமாக இருந்தால் ஒரு சரியான தலைமைத்துவம் வேண்டும். அந்த கட்சி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னம். இதனை மக்கள் அனைவரும் பலப்படுத்த வேண்டும்.

இன்று ஆட்சியல் இருக்கின்ற அநுர அரசு தேர்தலில் வழங்கிய வாக்குறுதிப்படி இந்த நாட்டின் பொருளாதாரத்தை மோசடியாகச் சுரண்டி, இலஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்களை கைது செய்கின்றனர். இது அவர்களுடைய அரசியல் இலாபகமாக இருக்கலாம். அல்லது உண்மையில் இந்த ஊழல் மோசடி செய்தவர்களை நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லுகின்ற நல்ல விடயமாக இருக்கலாம். எனவே ஊழல், மோசடி செய்தவர்களை கைது செய்வதை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதேவேளை நிறைவேற்றப்பட்டுள்ள லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டம் ஊடாக இந்த நாட்டில் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

எனவே எங்கள் மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் இலஞ்சம், ஊழல் இல்லாது மிக நேர்மையாக நேர்த்தியாக வாழக்கூடிய நிலைக்குக் கொண்டு போகக் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்பு உறுதுணையாக இருப்போம். ஆனால் எங்கள் மக்களை மீண்டும் ஏனைய அரசுகள் போன்று நீங்களும் இனழிப்புச் செய்யும் வழியில் செயற்பட்டால் நாங்கள் அதை எதிர்க்கின்ற விதமாகச் செயற்படுவோம்.

அதேவேளை தமிழ் மக்கள் சம உரிமையோடு வாழ்வதற்கு அரசியல் தீர்வு திட்டத்துக்கு அரசாங்கம் செல்ல வேண்டும். மாறாக தமிழர்கள் 76 வருடங்களாக எதிர்த்து வருகின்ற ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை நிறைவேற்றுவதற்காக இந்த அரசு தொடர்ந்து செயற்படுமாக இருந்தால் நாங்கள் நாங்களாகவே முடிவெடுக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம்.

அதேவேளை இந்தியா கொண்டு வந்த 13 ஆவது திருத்தச் சட்டம் ஓர் இனத்துக்குச் சார்பானது. அது தோல்வியடைந்துள்ளது. எனவே தமிழ் மக்கள் நீண்ட காலமாக தீர்வாக வலியுறுத்தும் சமஷ்டி முறையிலான தீர்வை உருவாக்க வேண்டும். அதனை இந்தியா கரிசனை கொண்டு செய்யவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பம். வடக்கு கிழக்கில் இந்தியாவை தவிர எவரும் கால்வைக்க ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

கடந்த காலத்தில் சிங்கள தேசத்துடன் சேர்ந்து இயங்கிய பிள்ளையான், கருணா ஒட்டுக்குழுக்கள் இந்த மண்ணிலே அரங்கேற்றிய படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போகச் செயற்பாடுகள் அனைத்தும் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. கடந்த காலத்தில் மாவட்டத்தில் எத்தனையே பேரைப் பிடித்து உயிருடன் தீயிட்டு கொலை செய்தமையுடன் திருகோணமலையில் வர்சா என்கின்ற சிறுமி, மட்டக்களப்பில் ஒரு சிறுமி இப்படி ஏகப்பட்ட படுகொலைகளைச் செய்திருக்கின்றார்.

அவர் தனது பதவிக்காகவும் சுயநலத்துக்காகவும் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்பதற்காக இந்தப் படுகொலைகளைச் செய்துள்ளார். ஒரு மோட்டார் சைக்கிளுக்காகக் கூட ஓர் இளைஞனைக் கொலை செய்த சம்பவம் இருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட கயவர்கள் ஒழிக்கப்பட வேண்டும். இதனுடன் தொடர்புபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

அண்மை காலமாக எமது கட்சியுடன் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற கட்சிகளைச் சேர்ந்த பலர் இணைந்து கொண்டிருக்கின்றனர். எனவே தமிழ்களுக்கான இறுதித் தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

கடந்த காலத்தில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது ராஜபக்ஷ குடும்பத்துடன் இணைந்து கிரிபத்து உண்டு வெடி கொழுத்தி மகிழ்ந்தவர்கள் இன்று தமிழ் தேசி உடையை போட்டுக் கொண்டு நாடகமாடி வருகின்றனர். இவர்கள் கடந்த காலங்களில் 2009, 10,12, காலப்பகுதிகளிலே இங்கு ஒட்டுக் குழுவாக இருந்த பிள்ளையான், கருணா குழுவுடன் இணைந்து மேடைகளில் ஏறி வாக்குகேட்டு பிரசாம் செய்தவர்

தொடர்ச்சி▼

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# சின்னவத்தை விகாரையைக் கட்டுவதற்கு அழைப்பு விடுத்தவர்கள் தமிழ்த் தேசிய உடையைப் போட்டுக் கொண்டு நாடகமாடுகின்றனர்

தொடர்ச்சி▲

கள். அவர்களுடன் இணைந்து பல கொள்ளை, கொலைகளில் சம்மந்தப் பட்டுள்ளனர்.

அவ்வாறே சின்னவத்தை விகாரையை கட்டுவதற்கான அழைப்பினை செய்தவர்கள். இப்படிப்பட்ட நபர்களுக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பியுள்ள மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறானவர்கள் இப்போது வெள்ளைவேட்டி சேட்டுடன் மாலை போட்டு தேர்தல் களங்களில் பெரிய வீராப்புக்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். இவர்களது கதைகளுக்கு ஒரு போதும் தமிழ் மக்கள் ஏமாறக் கூடாது. ஏன் என்றால் இவர்கள் தமிழ் தேசிய நிலைப்பாட்டுடன் இல்லை. ஆனால் தமிழ் தேசிய உடையைஒ பலர் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இவ்வாறு பிழையானவர்களுக்கு அதிகாரம் கொடுத்ததால் நாடு இந்தளவுக்கு போயுள்ளது. எனவே விழிப்பாக இருந்து செயற்படுங்கள். கொடுக்கப்படும் அதிகாரங்கள் ஒரு சரியான நபர்களுக்கு கொடுக்கப்படவேண்டும். – என்றார்.

# தமிழர்களை மிரட்டுகின்ற தேசிய மக்கள் சக்தி தரப்பு எந்த அடிப்படையில் தமிழரிடம் வாக்குக் கேட்கிறது?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர வேட்பாளர்கள் கேள்வி




நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய்யும் அடக்குமுறையை அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கின்றது என சுட்டிக்காட்டிய யாழ் மாநகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேட்பாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட முறைமைகள் கூட தெரியாதவர்களாக இன்றைய அரசுத் தரப்பினர் இருப்பது வேடிக்கை எனவும் தெரிவித்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர சபையின் மேயர் மற்றும் துணை மேயர் வேட்பாளர்கள் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:–

தனது கட்சியிடம் அதிகாரம் கிடைக்கும் பட்சத்திலே உள்ளூர் அதிகார சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படும் என்ற தொனிப்பொருளில் வடக்கின் தேர்தல் பிரசார மேடைகளில் கருத்து வெளியிட்டு வருகின்றார் ஜனாதிபதி.

இது ஒரு மிகப்பெரிய ஊழல் மோசடியாகும். இந்த மோசடி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு இரண்டாவது கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கருத்து ஒரு மக்கள் கூட்டத்தின் ஜனநயகத்தை கேள்விக் குறியாக்குகின்றது.

அது மட்டுமல்லாது இவர்கள் எத்தகைய பொய்யர்கள் என்பதை காட்டுகின்றது. இதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய்யும் அடக்குமுறையை இந்த அரசு செய்ய முயல்கின்றது.

இவர்களது மிரட்டல் அதிகார இலஞ்சத்தை எவரும் ஏற்காது தேசிய மக்கள் சக்தியை தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து மக்கள் தூக்கி எறிவது அவசியமாகும்.

எமக்கு மத்தியின் எந்த நிதியும் வேண்டாம். எமக்கு கேள்வி கேட்க அதிகாரம் இல்லை என்றால் உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது எம்மிடம் – எமது மக்களிடம் – வந்து வாக்குக் கேட்பதற்கு?

அந்தவகையில் தமிழரையும் தமிழர் இருப்பையும் இல்லாதொழித்த தேசிய மக்கள் சக்தியை தமிழ் அரசியல் பரப்பில் காலூன்ற விடாது அனைவரும் ஒருமித்து எதிர்கொள்வது அவசியம்.

இதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் கட்சிகளுக்குள் இருக்கும் முரண்படுகளே தேசிய மக்கள் சக்தியின் வடக்கின் வருகைக்கான வாய்ப்பை வழங்கியது.

இதை உணர்ந்து தமிழ் மக்கள் இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் தேசியப் பரப்பில் இருக்கின்ற தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிப்பது அவசியம். – என்று வலியுறுத்தினர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## வல்வெட்டித்துறை நகர சபைக்குப் போட்டியிடும் தமிழ்த்தேசியப் பேரவை வேட்பாளர்கள் அறிமுகம்

வல்வெட்டித்துறை நகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வல்வெட்டித்துறை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியக் கட்சியின் வல்வை இணைப்பாளர் வி. கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் என்.ஶ்ரீகாந்தா, பொதுச் செயலாளரும் வல்வை நகரசபையின் முதன்மை வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம், சமூக–அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க. சுகாஷ், யாழ் மாவட்ட அமைப்பாளர் செ. பொன் குணரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் கடந்த தேர்தல்களில் போட்டியிட்டு வந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இப்போது தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், தமிழ்த்தேசியக் கட்சி, சனநாயகத் தமிழரசுக் கட்சி ஆகியனவற்றையும் இணைத்துத்தமிழ்த்தேசியப்பேரவை என்னும் கூட்டணியாக உருப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

























# இலங்கையின் சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலை!

## அரசின் போக்குக் குறித்து பெரும் விசனம்

இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாதுஅற்றுப்போகும்நிலைஉருவாகியுள்ளது எனவும், இந்த நிலையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அனைத்திலங்கை வருங்கால சுதேச மருத்துவ அதிகாரிகள் சேவை சங்கத்தின் வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டு இவ்வாறு தெரிவித்த அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாடளாவிய ரீதியில் ஆயுர்வேத, சித்த, யுனானி, என்ற ரீதியில் இலங்கையில் சுதேச மருத்துவம் இருக்கின்றது.

இந்த கற்கை நெறியை நிறைவு செய்து தமிழ், சிங்களம் ,முஸ்லிம் என 1,700 பட்டதாரிகள் வேலைக்காகக் காத்திருக்கின்றனர்.



இதைவிட 600 பேர் இறுதிப் பயிற்சி நிலையில் இருக்கின்றனர்.

இதேநேரம் மருத்துவப் பயிற்சி நெறியை முடித்தும் அவர்களைப் பயன்படுத்தாத நிலையில் அல்லது போக்கில் இலங்கையின் சுதேச மருத்துவம் இருப்பது கவலையானது.

மக்களுக்காக சேவை செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். ஆனல் அரசு மௌனமாக இருக்கின்றது.

அதைவிட ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏறத்தாழ 1,600 இற்கும் அதிகமானோர் இருக்கும் போது வெறும் 350 இற்கும் குறைவானவர்களையே நியமனத்தில் உள்வாங்க அரசு முனைகின்றனர்.

ஆனால் கிராமங்கள் தோறும் சமூக நல வைத்திய அதிகாரிகளாகக் கூட எம்மைப் பயன்படுத்த முடியும்.

இந்த போக்கால் இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப் போகும் நிலையே உருவாகின்றது.

நாட்டில் இருக்கும் எமது வளங்களை கொண்டே மருந்துகளை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அதை அரசு முன்னெடுப்பதில்லை.

இவ்வாறன நிலையில் மேலதிக தகைமை என்று கூறி வேறு வேலைகளுக்கு கூட எம்மை இணைத்துக் கொள்கின்றார்கள் இல்லை என்றும் கூறிய அவர் இந்த நிலையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# வரணியில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த இளைஞனின் மரணத்தில் சந்தேகம்!

கொடிகாமம் - வரணி பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த 23 வயதுடைய இளைஞன் குறித்து பல்வேறு திடுக்கிடும் தகவல்களை அந்த இளைஞனின் பெற்றோரும் உறவினர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இது குறித்து அவர்கள் தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு வருமாறு:-

கடந்த வியாழக்கிழமை எனது மகன் குளித்துவிட்டு வந்தவேளை 3.00 மணிக்கு பின்னர் எனது மகனை அவரது நண்பர் அழைத்துச் சென்றார். அவருடன் சென்றுகொண்டிருந்தபோது இன்னொருநண்பர் குளிக்க வருமாறு தொலைபேசியில் கூறியவேளை எனது மகன் அவரிடம் சென்றுள்ளார். இதன்போது கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவர்களுடன் இருந்துள்ளார்.

அந்தக் கேணியில் யாரும் குளிப்பதில்லை. அது கோவில் கேணி. எனது மகன் தாமரை கொடி சிக்கி உயிரிழந்ததார் எனக் கூறுவது பொய். அந்தக் கேணியில் தாமரை கொடியே இல்லை. மரண விசாரணை அதிகாரி, பொலிஸார், சட்டத்தரணி உள்ளிட்ட பலர் சனியன்று அந்தப் பகுதிக்கு வந்தனர். இரண்டு பேரை அந்தக் குளத்தில் இறக்கி குளத்தைப் பரிசோதித்து பார்த்தனர், ஆனால் இருவரும் எந்தவிதமான பாதிப்புமின்றி வெளியே வந்தனர். உயிரிழந்த மகனின் சேட்டும், செருப்பும் குளத்தின் கரையில் இருந்தன.

கேணியின் அருகே 3 ரின்கள் இருந்தன. ஆனால் உடற்கூற்று பரிசோதனைகளில் இவர் மதுபானத்தை பாவித்தார் என அறிக்கையில் கூறப்படவில்லை. தண்ணீர் சுவாசப் பையின் உள்ளே சென்று அடைத்ததால்தான் மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் கூறப்படுகிறது. தோளில் பிடித்து அழுத்திய கண்டல் காயம் உள்ளது.



அவரது சடலம் மூழ்கியிருந்த இடத்தில் ஒரு நீளமான மீற்றர் கட்டை ஒன்று குற்றப்பட்டு இருந்தது. அப்படி அவர் தாழ்ந்திருந்தால் அந்த கட்டையில் பிடித்து ஏறியிருப்பார்.

மந்திகை வைத்தியசாலையில் எங்களது பிள்ளையின் சடலம் இருப்பதாக கேள்வியுற்று நாங்கள் அங்கே சென்றவேளை, அவரை வைத்திய சாலையில் சேர்ப்பித்தவர்கள் இருவர் பொய்யான பெயர் கொடுத்துள்ளனர் என்ற விடயம் தெரியவந்தது. ஏன் பொய்யான பெயர் கொடுக்க வேண்டும்? அன்றையதினம் அவர் யாருடன் பேசினாரோ அவ்வளவு விவரங்களும் கைபேசியில் இருந்து அழிக்கப்பட்டிருந்தது. எங்களுடைய தம்பி ஒருவர் கைபேசியை வாங்கும் போது அங்கிருந்த ஒருவர் கைபேசியை பறித்தார், ஒரு மணித்தியாலம் அந்த கைப்பேசியை வழங்கவில்லை.

சடலம் மூழ்கியிருந்த இடத்தை நீதிவானுக்கு காட்டிய பொலிஸார் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டனர். பிறகு அவர்கள் வரவில்லை. எங்களிடம் விசாரணைகளுக்கு வந்த பொலிஸார், நீதிமன்றத்தில் நீங்கள் சட்டத்தரணி வைக்க வேண்டாம், நாங்கள் உங்களுக்காக வாதாடுகின்றோம் என்றனர்.

அவரது உடலை தொட்டவேளை உடலில் சூடு இருந்தது. ஆகையால் சடலத்தை பிரேத அறையில் போட வேண்டாம் என நாங்கள் கூறியவேளை, அவரது நண்பர்கள் சடலத்தை பிரேத அறையில் போடுமாறு விடாப்பிடியாக கூறினார்கள். அவருக்கு அங்கே சிகிச்சை அளிக்கப்படவில்லை என்ற சந்தேகம் எழுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் உறவினர்கள் வைத்தியசாலையில் இல்லை.

சிவரூபன் என்ற பெயரிலேயே கையொப்பமிட்டு அவரை வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். ஆனால் அந்த சிவரூபன் யார் என இதுவரை எமக்கு தெரியவில்லை. உடனிருந்த நண்பர்கள் யாரும் இதுவரை சடலத்தை பார்ப்பதற்கு வீட்டுக்கு வரவில்லை.

கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தான் கொடிகாமம் பொலிஸ் இல்லை பருத்தித்துறை நிலைய பொலிஸ் என்று மந்திகை வைத்தியசாலையில் வைத்து கூறியுள்ளார். ஆனால் அவர் கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர். அவர் ஏன் பொய் கூற வேண்டும்?

இந்தச் சதியில் ஈடுபட்ட 4பேரை எமக்கு தெரியும். ஆனால் இதில் பலர் தொடர்புபட்டனர் எனக் கூறப்படுகிறது. இந்த சம்பவத்தை சிலர் காணொளியும் பதிவு செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. எனவே அந்த காணொளி யாரிடம் உள்ளது என்று தேடி பிடிப்பதோடு, நாங்கள் கூறுகின்ற நான்கு பேரிடமும் விசாரணைகளை மேற்கொண்டால் என்ன நடந்தது என கண்டுபிடிக்க முடியும். - என்றனர்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.**

**இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.**



**ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.**

**1**







# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதிகள் மீதும் விடுதலை புலிகளின் முன்னாள் தளபதியான கருணா மீதும் பிரித்தானியா விதித்துள்ள தடைகள் புதியனவாகவோ சடுதியானவையாகவோ மேற்கொள்ளப்பட்டவை அல்ல. அமெரிக்கா, கனடா போன்ற சில மேற்கத்திய நாடுகள் இந்த தளபதிகளின் மேல் ஏற்கனவே தடைகளை அமுல்படுத்தி உள்ள போது, கருணா அம்மானுக்கு எதிரானது முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அநுரவின் ஆட்சியின் நிகழ்ச்சி நிரல்கள், அதன் நிலைப்பாடுகள் ஆகியவை பற்றிய நீண்ட ஆராய்வுகளின் பின்னர், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரும், அதன் பலதரப்பட்ட அதிகாரிகளும் அநுர அரசுடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில், இந்த அரசும் தொடர்ந்து சிங்கள – பௌத்த மேலாண்மையை நிலைநிறுத்தும் பண்புகளையே வெளிப்படுத்துகின்றது என்பதை உணர்ந்து கொண்டமையினாலேயே இந்தத் தடை உத்தரவுகள் மேற்கொள்ளப்பட்டன என்ற கருத்துக்கள் வலுவாகின்றன.

முக்கியமாக போர்க் குற்ற விசாரணை பற்றி எந்த விதத்திலும் இணங்கி வரக்கூடிய சாத்திய

தொடர்ச்சி ▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

**தொடர்ச்சி▲**

கூறுகளைக் காண முடியாதமையினாலேயே இந்தத் தடையை பிரித்தானியா விதித்ததாக அறிவித்திருக்கிறது. அத்தோடு இந்த நடவடிக்கை, சர்வதேசம் பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவதில் திடமாக இருக்கின்றது என்ற செய்தியையும் வெளிப்படையாக சொல்லி, அதன் அடிப்படையில் வழிவகைகளை ஆராய இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டதாக கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

சுருக்கமாகப் பார்த்தால், கொழும்பின் அரசாங்கங்கள் திருந்துவனவாக தெரியவில்லை. முன்னவர்களின் வழிகளிலேயே அநுர அரசும், எவ்வித சர்வதேச போர்க் குற்ற விசாரணைகளுக்கும் இணங்கத் தயாராக இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் ஜனாதிபதியால் ஓங்கி பிரசாரப்படுத்தப்பட்ட – நல்லிணக்கம், நீதி நிலைநாட்டப்படும், குற்றங்கள் இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை வாசகங்கள் எல்லாம் மங்கி, தற்பொழுது அநுர அரசே தாம் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கோட்டாபய பாணியில் அறிவித்துள்ள நிலைமை வந்துள்ளது. சமதர்மத்தில் இந்த அறிவிப்புப் பற்றி தமிழ் மக்களுடனோ அல்லது தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பிரதிதிகளுடனோ அவர்களின் அங்கலாய்ப்புக்கள் கணக்கெடுத்துக்கொள்ளப்பட்டது என செய்திகள் இல்லை. அது அரசின் முடிவு. அவ்வளவுதான். அவற்றை சர்வதேசம் புரிந்து கொள்ளும்.

போரில் முடிவில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு எதுவித போர்க் குற்ற விசாரணைகளுக்கும் இணங்கவில்லை. பின்னர் நல்லாட்சி காலத்தில் ரணிலின் அரசு, மங்கள சமரவீர வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த பொழுது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரேரணைகளுடன் இணைந்து செயல்படுவதாக ஏற்றுக் கொண்டார். எனினும் வழமையான பாணிகளில் மனித உரிமைகள் சபையின் அமர்வுகள் முடிந்ததும், தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் இழுத்தடிக்கப்பட்டன. பின்னர் கோட்டாபய தனது தேர்தல் பிரசாரங்களில் தான் ரணிலின் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை மீளப் பெறுவேன் என்று பிரசாரம் செய்து, சிங்கள பேராண்மையின் கரகோஷங்களோடு ரணில் ஏற்றுக்கொண்ட தீர்மானங்களில் இருந்து வெளியேறினார். பின்னர் அந்த நிலைப்பாட்டையே ரணில் தாம் ஜனாதிபதியானதும் தொடர்ந்தார்.

ஜேர்மனிய தொலைக்காட்சிக்கு தந்த செவ்வியில் தாங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரேரணைகளை நடைமுறைப்படுத்தப் போவதில்லை, சிறிய நாடான தங்களை அச்சுறுத்துகின்றமையை ஏற்கப் போவதில்லை என்று கூறிவிட்டு, பின்னர் அல்ஜஸீராவின் மெஹிதி ஹுசெயின் செவ்வியில் ரணிலின் கனவான் தோற்றம் கிழிபட்டு, பட்டலந்தை வதை முகாம் அறிக்கையை எதிர்கொள்ளும் போது, மனித உரிமைகள் கவுன்ஸிலுடன் இணைந்து பயணிப்பது நாட்டிற்கு நன்மை, மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை போன்றவர்களுடன் ஊடாடுவது சுலபமானது என்று வேதம் ஓதுகிறார் ரணில்.

இந்த வரலாறுகளை அறிந்திருந்தாலும், பட்டலந்த அறிக்கையொட்டி வெளிவந்த ஊடகச் செய்திகளில் இது பலவாறாக, விதம் விதமான கோணங்களில் பேசப்பட்டு, ஆராயப்பட்டது. எனினும் தொடர்ந்து எழுத விரும்பும் வரலாற்றின் தொகுப்புகளுக்காக இதனை மேல் நினைவுபடுத்துவது முக்கியம் என்று கருதுகிறேன்.

இவற்றை அனுபவங்களின் ஊடாக அறிந்தும், அதனைக் கண்டு கொள்ளாது, ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னான நாள்களில் இருந்து தமிழ் மக்களில் பலர் – முக்கியமாக இளைஞர்கள் – அரசியலை விடுதலைப் புலிகளின் காலப்பகுதியின் அளவுகோல்களில் இருந்து தெரிந்து கொண்டு, முன்னையவற்றை விட்டு, அரைச் சாண் நீரில் முக்கி எழும்புவர்களாக, அநுரவை வரப் பிரசாதமாகக் கிடைத்த தலைவர் என்ற பிம்பத்தை கட்டியெழுப்பி அதில் குளிர் காயவும், தேர்தல்களில் இடம் தேடிக் கொள்ளவும், காணொளிகள் பத்தும் பலவுமாகப் பரப்பப்படுகின்றன. தேசியம் பேசிய விடுதலைப் புலிகளின் போரின் முடிவுகளும், அதன் பின் தேசியம் பேசிய தலைவர்களின் இயலாத் தன்மைகளையும், செயல் திறனற்ற போக்குகளையும் காட்டி, அநுரவின் கட்சியின் வரலாறுகள், சித்தாந்தங்களை முழுமையாக விளங்கிக் கொள்ளாமல், நுனிப் புல் மேய்ந்து, தமிழ் மக்களது அபிலாஷைகளை – ஆகக் குறைந்த பட்ச அதிகாரப் பகிர்வையே குழிதோண்டிப் புதைக்கக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். வார்த்தை ஜாலங்களை மட்டும் நம்பி, வழமை போல கொழும்பின் அரசியல் லாபங்களைத் தேடி, அதற்காக ஆதரவு தரும் கூட்டம் எப்பொழுதுமே – உரிமைக் கோஷங்கள் எழுந்த காலங்களில் இருந்தே – இருந்து வந்திருக்கின்றன.

இவர்கள் அடிப்படைக் கோரிக்கையான அதிகாரப் பகர்வையே குழி வெட்டிப் புதைக்க புறப்படுகிறார்கள் என்பதைத்தான் என் பட்டறிவு சொல்கிறது.

**(வளரும்)**



# மாமனிதர் சிவநேசனின் நினைவு தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்

(பிரபாகரன் டிலக்சன்)

சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் நினைவு தினம் நேற்றைய தினம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் – நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17ஆவது நினைவு தினம் இடம்பெற்றது.

இதன்போது மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் புதல்வர் ஈகைச்சுடர் ஏற்றி உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் சுகாஷ் கனகரத்தினம், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் நல்லதம்பி சிறீகாந்தா, செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

















# மன்னார் பள்ளமடுவில் பொலிஸாரின் சமிக்ஞையையும் மீறி சென்ற மணல் டிப்பர் மீது துப்பாக்கிச் சூடு; இருவர் கைது!

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் சட்ட விரோதமாக மணல் மண் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் டிப்பரை கடமையில் ஈடுபட்ட அடம்பன் பொலிஸார் இடை மறித்த சமயம், பொலிஸாரின் சமிக்ஞைக் கட்டளையை மீறி பொலிஸார் மீது வாகனத்தால் மோதித் தப்பிச் செல்ல டிப்பர் முற்பட்டதாகக் கூறப்படுகின்றது. அப்போது அந்த டிப்பரை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சுட்டுச் சம்பவத்தை தொடர்ந்து டிப்பர் நிறுத்தப்பட்டது.

அந்த டிப்பரில் சட்ட விரோதமான முறையில் ஏற்றிச் செல்லப்பட்ட மண் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டன. அவை கைப்பற்றப்பட்டன என அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் டிப்பரின் சாரதி மற்றும் உதவியாளர் அடம்பன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும், கைப்பற்றப்பட்ட பொருள்களும் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அரச மற்றும் தனியார் காணிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்ற போதும் அடம்பன் பொலிஸார் மௌனம் காத்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.










# இன்றைய ராசி பலன்கள் - 21.04.2025

## மேஷம்

இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.

## ரிஷபம்

இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்திசாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

## கடகம்

இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கைக் மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

## சிம்மம்

இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

## கன்னி

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான் நாள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## துலாம்

இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ்நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

## விருச்சிகம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.04.2025




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.




இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம்.

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.



# ஆயிரம் போதை மாத்திரைகளுடன் சாவகச்சேரியில் இளைஞன் கைது

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயிரத்துப் பத்து போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைமாத்திரைகளை மறைத்து வைத்திருக்கின்றார் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் ஆலோசனைக்கு அமைவாக சப் இன்ஸ்பெக்டர் மயூரன் தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.